# 1857 - சென்னை அணிவகுப்பில்

### * எட்டாவது மெட்ராஸ் லைட் குதிரைப்படை – பெங்களூரை மையமாகக் கொண்ட புரட்சி.

9



1857 பிப்ரவரி மாதத்தில், மெட்ராஸ் சிப்பாய் ரெஜிமென்ட், விஜயநகரத்தில் முகாமிட்டிருந்தது. அந்தப் படையை அங்கிருந்து கர்னூலுக்கு அணிவகுத்துச் செல்லுமாறு உத்தரவிடப்பட்டது. ஆனால் அந்த ரெஜிமென்ட் இந்த உத்தரவை ஏற்றுக்கொள்ள மறுத்தது.

அதற்குக் காரணம், தங்களது குடும்பத்தாரையும் உடன் அழைத்து செல்ல ஏதுவாக, தேவைப்படும் அளவுக்கு கேரெஜ்களை அரசு வழங்கவில்லை என்ற ஏமாற்றம் அந்தப் படையினர் மனத்தில் இருந்தது. ஆனால் உண்மையில் இத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையில், ராணுவ அதிகாரம் வழங்குவது மெட்ராஸ் ராணுவத்தில் மிகவும் அரிதானது.

எனவே 1857 சுதந்திரப் போராட்டத்தின் ஆரம்பக்கட்டங்களில், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஒரு நாடகத்தை நடத்த வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டது. அதாவது, பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு

மண்ணின் மைந்தர்களான போர்வீரர்களைக் கொண்ட மெட்ராஸ் ரெஜிமென்ட் படையினர் மிகவும் விசுவாசமாகவும், வேலையில் கண்ணும் கருத்துமாகவும் உள்ளனர் என்பதை, இந்திய ரெஜிமென்டுக்கும், குறிப்பாக பெங்கால் ரெஜிமென்டுக்கும், அதிலும் குறிப்பாக இந்திய மக்களுக்கும் வெளிப்படுத்தவேண்டும் என்று செயலில் இறங்கியது.

இந்தியாவின் வடக்குப் பகுதியில் ராணுவத்தினரிடையே தோன்றிப் பரவியிருந்த சுதந்திரப் போராட்டத்தினைக் குறித்த செய்திகள், மெல்ல மெல்ல இந்தியாவின் தென்பகுதியிலுள்ள பிரிட்டிஷ் இந்திய ராணுவத்திடையேயும் பரவத் தொடங்கின.

பெங்கால் ராணுவத்தினரிடையே கலந்திருந்த புரட்சிப் படையைச் சேர்ந்த ஒற்றர்கள் சிலர், மெட்ராஸ் ராணுவத்தில் உள்ள வீரர்களை சந்தித்து, தங்களது சுதந்திரப் போராட்டத்தினைப் பற்றிய திட்டங்களை விவரித்தனர். அத்துடன் எங்கெல்லாம் மெட்ராஸ் மற்றும் பெங்கால் ரெஜிமென்ட் முகாமிட்டிருந்ததோ, அங்கெல்லாம் சென்று பிரிட்டிஷாருக்கு எதிரான உணர்வைப் பரப்பி போருக்குத் தயாராக்கினர்.

ஏழாவது குதிரைப்படை ஐதராபாத்தில் முகாமிட்டிருந்தது. அந்த நேரத்தில், அதாவது 1857 ஜூன் மாதத்தில், புரட்சிக்காரர்கள் பிரிட்டிஷாருக்கு எதிரான கருத்துகளை ஐதராபாத் மக்களிடையே சென்று பிரசங்கம் செய்தனர். இதையறிந்த அரசு, புரட்சிக்காரர்களை அடக்குவதற்காக புதிய சட்டத்தைக் கொண்டு வந்தது. அதன்படி ‘சந்தேகப்பேர்வழி’ என்ற பிரிவின் கீழ் தென்னிந்தியாவில் பலர் கைது செய்யப்பட்டனர்.

1857 செப்டம்பர் 3-ம் தேதியிட்ட சென்னை மாகாண பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அறிக்கையிலிருந்து, அப்போதைய கலவரமான நிலவரத்தை நன்றாக அறியலாம்.

சென்னை மாகாண அரசின் அறிக்கை இது:

*‘இரண்டு சூழ்நிலைகளில், சிலருடைய மோசமான செயல்களால், நமது மாகாணத்தில் உள்ள மக்களிடம் மாகாணத்தின் மீது அவநம்பிக்கையும் வெறுப்பும், அதிருப்தியும், விசுவாசமின்மையும் எதிர்பாராத விதமாக தோன்றியிருக்கின்றன. இதற்கு பல வழிகளிலும் பொருளாதார ரீதியாகவும் உதவிகள் கிடைத்திருக்கிறது.*

*‘எனவே அரசு, பொதுப்பணித்துறையில் நடைபெற்றுவரும் பணிகளை நிறுத்திக் கொள்வதோடு, இந்த வேலைகளுக்காக வழங்கப்பட்டுள்ள ஆர்டர்களையும் ரத்து செய்ய வேண்டும். சாதாரண மக்களிடம் பணப்புழக்கம் மட்டுப்பட வேண்டும். எனவே அவர்களை இந்தப் பணிகளிலிருந்து வெளியேற்ற வேண்டும்... ... ...’*



மெட்ராஸ் ராணுவத்தின் இந்திய சிப்பாய்கள், 'பிரிட்டிஷாருக்கு விசுவாசமானவர்களே' என்று இந்திய மக்களுக்கு உணர்த்துவதற்காக, வெளிப்படையான சில செயல்களை மெட்ராஸின் பிரிட்டிஷ் கவர்னர் மேற்கொண்டார்.

அதன் ஒரு பகுதியாக 'மெட்ராஸ் பிரிகேட்' என்ற தனி ராணுவப் படையை உருவாக்கினார். அதில் ஆயுதப்படை, குதிரைப்படை என்று தனித்தனியான பிரிவுகளையும் உருவாக்கி, அதன் ஒவ்வொரு பிரிவுகளையும் வேலைக்கு தயாராக்கினார். பின்னர் இந்த மெட்ராஸ் பிரிகேட்-ஐ 1857 ஜூன் வாக்கில் பெங்காலுக்கு அனுப்பினார்.

இந்த வேலைக்காகத் தேர்வு செய்யப்பட்ட ஒரு படைப் பிரிவுதான், மெட்ராஸ் ராணுவத்தின் 8வது குதிரைப்படைப் பிரிவு. இந்த ரெஜிமென்ட், பெங்களூரில் முகாமிட்டிருந்தது. இதில் முக்கியமாக கவனிக்கத் தக்க விஷயம், அப்போது மைசூர் மாநிலம் பிரிட்டிஷாரது ஆளுகைக்குள் கொண்டு வரப்பட்டிருந்தது என்பதுதான்.

மெட்ராஸ் ராணுவத்தின் எட்டாவது குதிரைப்படை ரெஜிமென்ட்டில் எல்லா வீரர்களுமே பிரிட்டிஷாருக்கு விசுவாசமானவர்களாகத்தான் இருப்பார்கள் என்று அந்த ரெஜிமென்ட்டின் அதிகாரிகள் நினைத்தனர்.

எனவே அந்த எண்ணத்தை மனத்தில் கொண்டே, இந்தப் படைப்பிரிவினர் தமது சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற திமிரான எண்ணம் மேலோங்க, அவர்களை பெங்களூரிலிருந்து

மதராஸுக்கு நகர வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். இந்த உத்தரவு 1857 ஜூலை மாத இறுதியில் வெளியிடப்பட்டது.

ஆனால் தலைமையின் திமிர்த்தனத்தை அறிந்து, ஏதாவது ஒரு வகையில் இந்த உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்துவிடவேண்டும் என்ற உத்வேகத்தில் படைவீரர்கள் இருந்தார்கள். எனவே, 'தங்களுக்குப் பழைய விகிதத்திலேயே பயணப்படியும், பென்ஷனும் தரவேண்டும்' என்று அடம்பிடிக்கத் துவங்கினார்கள்.

1833 வாக்கில்தான் படைவீரர்களுக்கான ஊதியம் மற்றும் படி விவகாரத்தில் புதிய விகிதங்களை அரசு அறிவித்திருந்தது. இது படைவீரர்களை வெகுவாக பாதித்தது.

பழைய விகிதத்தின் படியே, பயணப்படியும் பென்ஷன் இத்யாதிகளும் வழங்கப்படாவிட்டால் ஒரு அடிகூட முன்னே வைக்கப்போவதில்லை என்றும், இந்த இடத்தைவிட்டு நகரப் போவதில்லை என்றும் படைவீரர்கள் உறுதியாகக் கூறினர்.

இதன்மூலம் 1857 ஜூலை மாத இறுதியில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராக ஏதாவது ஒரு வகையில் எதிர்ப்பு தெரிவித்துவிட வேண்டும் என்ற மனோபாவம் படைவீரர்களிடம் (மெட்ராஸ் 8வது குதிரைப்படை) தலைதூக்கியது வெளித்தெரிகிறது.

இப்படி ஒரு சூழலில், அந்த ரெஜிமென்ட்டில் அமைதியற்ற நிலையே காணப்பட்டது. அந்த ரெஜிமென்ட்டில் பிரிட்டிஷ் கமாண்டிங் அதிகாரி மற்ற இந்திய அதிகாரிகளை அழைத்து இந்த விஷயத்தைக் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் படைவீரர்கள் தங்களது கோரிக்கைகளில் உறுதியாக இருந்தனர்.

இறுதியில் இந்திய அதிகாரிகள் மேற்கொண்ட சமரசப் பேச்சால், இந்த விஷயத்தை வேறு ஒரு சூழ்நிலையில் கிளப்பலாம் என்ற முடிவுடன் தங்களது கோரிக்கையை திரும்பப் பெற்றனர். அவர்களிடையே ஆழ்ந்த அமைதி நிலவியது.

பிரிட்டிஷ் கமாண்டிங் அதிகாரியோ, நடந்துவிட்ட இந்த விஷயத்தை மேலோட்டமாக எடுத்துக் கொண்டு, படையினரைப் பற்றி தவறாக கணித்தார். படைவீரர்கள் தாங்கள் மேற்கொண்டு பயணப்பட தயாராக இருப்பதை தாமாக முன்வந்து அறிவித்தனர். இதைக் கேட்டு மிகுந்த மகிழ்ச்சியுடனும், மனத் தெம்புடனும் மெட்ராஸ் 8வது குதிரைப்படையின் தலைமை கமாண்டருக்கு செய்தியனுப்பினார் பிரிட்டிஷ் கமாண்டிங் அதிகாரி.

இந்தப் படைப்பிரிவு மெட்ராஸுக்கு அருகிலுள்ள ஸ்ரீபெரும்புதூரை அடைந்தது. இங்கிருந்து இந்தப் படைப்பிரிவின் முதல் அணி கப்பல் மூலமாக பெங்காலுக்கு அனுப்பப்பட்டது.

இந்த வேளையில்தான் பிரிட்டிஷாரின் உண்மை நோக்கத்தை மற்ற படைவீரர்கள் தெரிந்து கொண்டனர். அதன்பிறகு அவர்கள் சற்று உஷாராயினர்.

தாங்கள் அனைவரும் பெங்காலுக்கு அனுப்பப்படப் போவதையும், தாங்கள் அனைவரும் பிரிட்டிஷ் அரசுக்கு விசுவாசமானவர்களாக இந்திய மக்களுக்குக் காட்டுவதற்காகவே பிரிட்டிஷார் தங்களை பெங்காலுக்கு அனுப்ப எண்ணுவதையும் உணர்ந்தனர். எனவே மொத்த ரெஜிமென்டும் அங்கிருந்து நகர மறுத்தது. தான் ஏமாற்றப்பட்டதைத் தாமதமாக உணர்ந்தார் பிரிட்டிஷ் கமாண்டிங் அதிகாரி.

அங்கே, லேசான போர்ச்சூழல் உருவானது. அது சுதந்திரப் போராட்ட சமயம் என்பதால், எட்டாவது குதிரைப்படை பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் உத்தரவுக்குக் கட்டுப்பட மறுத்தது.

இந்த நேரத்தில், பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த ரெஜிமென்டை பெங்காலுக்கு அனுப்புவதற்காக பெரும்பாலான கப்பல்களை வாடகைக்கு எடுத்திருந்தது. ஆனால் கடைசி நிமிடத்தில் இந்த ரெஜிமென்ட்டின் இந்தியப் படைவீரர்கள் பலத்த எதிர்ப்பினைத் தெரிவித்ததால், அது பெருத்த ஏமாற்றத்தை சந்தித்தது.

மெட்ராஸ் ராணுவத்தின் தலைமை கமாண்டர், மெட்ராஸ் கவுன்சிலின் கவர்னருக்கு அறிக்கையை அனுப்பி வைத்தார். அதில் தனது கோபத்தினை அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த ரெஜிமென்ட் இவ்வாறு செய்ததன் மூலம், தங்களை ஏமாற்றிவிட்டதாகவும், அவர்கள் மீதான நம்பகத்தன்மையை இழக்கச் செய்துவிட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.



மெட்ராஸ் அரசாங்கமும் இப்படியே எண்ணியது. ஆனால் கவுன்சிலின் கவர்னர், ரெஜிமென்டிலுள்ள இந்திய அதிகாரிகளைத்தான் சந்தேகித்தார்.

இதன்படி அவர்களுக்கு முடிவாகத் தெரியவந்தது என்னவென்றால் - எட்டாவது குதிரைப்படையைச் சேர்ந்த இந்திய அதிகாரிகள், பிரிட்டிஷாரின் நோக்கத்தினை முன்பே தெரிந்து வைத்திருந்ததால், பெங்களூரிலிருந்து கிளம்பும்போது ரெஜிமென்டை சமாதானப்படுத்தி, பின்னர் ஸ்ரீபெரும்புதூர் வந்தவுடன் அவர்களிடம் பிரிட்டிஷாரின் நோக்கத்தை வெளிப்படுத்தி படையினரைத் தூண்டிவிட்டுள்ளனர் - என்பது!

இதை விசாரணைக்குப்பின் தெரிந்து கொண்ட கவுன்சில் கவர்னர், மெட்ராஸ் ராணுவத்தின் தலைமை கமாண்டருக்கு ஒரு பரிந்துரை செய்தார்.

அதன்படி இந்த ரெஜிமென்டின் ஆறு இந்திய அதிகாரிகள் (சுபேதார் மேஜர் சையத் பீர், சுபேதார் மொஹம்மத் வஸிர், சுபேதார் சையத் மொய்தீன், சுபேதார் ஹனுமந்தராவ், சுபேதார் சையத் அன்சர், சுபேதார் மொஹம்மத் இமாம் ஆகியோர்) பணியிலிருந்து நீக்கப்பட்டதுடன், நிலைமை மோசமடையக் காரணமான மேலும் இரண்டு பேர் (பாஸில் கான், ஹவில்தார் மேஜர் ஷேக் உசேன்) உடனடியாக நீக்கப்பட்டனர்.

அத்துடன் மொத்த ரெஜிமென்டுக்கும் பணி உயர்வும், பணி அமர்த்தலும் தடை செய்யப்பட்டன. பின்னர் இந்த ரெஜிமென்ட் கலைக்கப்பட்டு, இதிலிருந்தவர்கள் பலத்த சோதனைகளுக்குப் பின்னர் வேறு குதிரைப்படைப் பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டனர்.